மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 18ம் நாள் புதன் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 508/2018 வா.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. ராஜேந்திரன் | வயது | .. 56 |
| த/பெ. | .. நாராயணசாமி | சாதி | .. |

18.08.2021 - வா.சா.2 குறுக்கு விசாரணை.

வாதி, பிரதிவாதிகளை எனக்குத் தெரியும். அவர்கள் உறவினர்களா என்றால் இல்லை. வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு சொந்தம் என்றால் கிருஷ்ணன், நாராயணசாமி, ஏழுமலை, மற்றும் கண்ணன் ஆகியோருக்கு சொந்தமானது. மேற்கண்ட 4 நபர்களுக்கு முன்பு அவர்களின் தகப்பனாரும் என்னுடைய தாத்தாவுமான அல்ராஜ் மந்திரி என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அல்ராஜ் மந்திரி இறந்த பின்பு வழக்கு சொத்தை அவர்களது மகன்கள் 4 பேரும் வாய்மொழியா பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் நாராயணசாமி மகன். அவர் தற்போது உயிருடன் இல்லை. நாராயணசாமி இறந்த பின் கிருஷ்ணன் இறந்து விட்டார் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அக்ரிமெண்ட் எழுதியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது எப்போது எழுதப்பட்டது என்றால் 1982ல் அல்லது 1983ல் இருக்கும். அந்த அக்ரிமெண்ட் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் நானும், எனது பெரியப்பா கிருஷ்ணன் என்பவரும் வாதி மணி என்பவருக்கு எழுதிக்கொடுத்தோம். அது பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆன மேற்கண்ட அக்ரிமெண்ட் பத்திரம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அந்த அக்ரிமெண்ட்டில் எனது பெரியப்பா கிருஷ்ணன் கைரேகை வைத்துள்ளரா, கையெழுத்துபோட்டுள்ளாரா என்றால் கைரேகை வைத்துள்ளார். மேற்படி கைரேகை

கிருஷ்ணன் என்பவருடையது அல்ல என்றாலும் ஆள்மாறாட்டம் செய்து கைரேகை வைக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அது அவர் உயிருடன் இருக்கும்போது எழுதப்பட்ட ஆவணம். அக்ரிமெண்ட் எவ்வளவு தொகைக்காக போடப்பட்டது என்றால் ரூ.49,000 சொச்சத்திற்கு போடப்பட்டது. அக்ரிமெண்ட் முன்னிலைக்கு முன் பணமாக எவ்வளவு பெற்றேன் என்றால் 15,000 ரூபாய் இருக்கலாம். அக்ரிமெண்ட் போட்டு பல ஆண்டுகளாகி விட்டதால் சரியாக ஞாபகம் இல்லை. மீதி தொகை எப்போது கொடுத்தார்கள் என்றால் 3 தவணையாக கொடுத்தார்கள். எப்போது என்று சரியாக ஞாபகம் இல்லை. உண்மையில் அக்ரிமெண்ட் எழுதிக்கொடுத்திருந்தல் பணம் எப்போது கொடுத்தார்கள் என்று ஞாபகத்தில் இருந்திருக்கும் என்றாலும், உண்மையில் எழுதிக்கொடுக்ககாததாலும் மோசடியாக தயாரிக்கப்பட்டதாலும் தான் சரியான காலத்தை சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ன்படி கடைசி தவணை வரவு 23.02.1990ல் ரூ.19,000/- வரவு வைக்கப்பட்டு மீதி தொகையான ரூ.2,685.50 ஐ கொடுக்க 3 ஆண்டுகள் கால அவகாசம் கொடுத்து வா.சா.ஆ.7 ஆன கிரையப்பத்திரத்திற்கு சாதகமாக இந்த கிரைய அக்ரிமெண்ட் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த கிரைய அக்ரிமெண்ட்டில் எவ்வளவு சொத்து கிரையம் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மொத்தம் 1 ஏக்கர் 62 1/2 செண்ட் கிரையம் கொடுப்பதாக எழுதப்பட்டது. வா.சா.ஆ.6ல் மின் இணைப்பு சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் மின் இணைப்பு சம்பந்தமாக வா.சா.ஆ.6ல் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.6ன்படி நாங்கள் கிரையம் கொடுத்தோமா என்றால் 1992ல் கிரையம் கொடுத்தோம். அக்ரிமெண்ட் முன்னிலைக்கு மொத்த தொகையையும் கிரையத்தேதிக்கு முன்பே பெற்றுக்கொண்டு தான் கிரையம் கொடுத்தோம். வா.சா.ஆ.7 ஆன கிரையப்பத்திரத்தில் கிரைய தொகை ரூ.28,600/- க்கு கிரையம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. வா.சா.ஆ.7ல் உள்ளபடி ரூ.10,000/- கிருஷ்ணன் மந்திரியின் வைத்திய செலவிற்காக ரொக்கமாக பெற்றுக்கொண்ட வகையில் ரூ.10,000/-மும், போளூர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கி ஆகியவற்றில்

நான் பெற்ற கடனை அடைக்கும் பொருட்டு ரூ.11,000/- பெற்றுக்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்கண்டவற்றில் பாரத ஸ்டேட் வங்கியில் நான் கடன் ஏதும் பெறவில்லை. அதைத் தவிர மற்ற சங்கதிகள் சரிதான். மீதி தொகையான ரூ.7,600/-ஐ கிரையப்பத்திரம் எழுதிய அன்று பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் கிரையத்தொகையாக ரூ.49,000/- என்றும், அந்த தொகையை அந்த ஆவணத்திலேயே வரவு வைத்ததாகவும் கூறிவிட்டு வா.சா.ஆ.7ல் அதற்கு மாறாக கிரையத்தொகை ரூ.28,600/- என்றும் அதன் வரவு விவரம் வேறு வகையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் அல்ராஜ் மகன்கள் 4 பேருக்கும் சம உரிமை உள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணன் என்பவர் திருமணம் ஆகாமலேயே இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் ஊனமுற்றவர் என்பதால் அவரது தம்பி மகனான என்னிடம் தான் இருந்து வந்தார். எனது சித்தப்பாவிற்கும் மகன்கள் யாரும் இல்லை என்பதால் நான் கிருஷ்ணனின் வளர்ப்பு மகனாக இருந்தேன். நான் கிருஷ்ணன் என்பவரின் வளர்ப்பு மகன் என்பதற்காக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.6 ஆனது என்னாலும் எனது பெரியப்பா கிருஷ்ணன் என்பவராலும் எழுதப்பட்டது என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ.7 ஐ கிருஷ்ணன் என்பவர் இறந்து விட்டதால் நான் மட்டும் தான் எழுதிக்கொடுத்தேன். எனது சித்தப்பாக்கள் யாரும் ஆட்சேபணை செய்யவில்லை. கிருஷ்ணன் இறந்த பிறகு அவரது சொத்துக்கள் அவருடைய தம்பிகளுக்குத்தான் செல்லும் என்றாலும் எனக்கு அவரது சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. கிருஷ்ணன் இறந்த பிறகு அவரது பாக சொத்தை அவர்களது தம்பிகளான ஏழுமலை, கண்ணன் மற்றும் எனது தகப்பனார் நாராயணசாமி இறந்து விட்டதால் எனக்கும் வந்து அதன் படி ஏழுமலை, கண்ணன் ஆகியோர் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு அவர்களுக்கு வந்த சொத்தை தனித்தனியாக கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. ஏழுமலை என்பவர் வழக்கு

சொத்து பாகம் பிரிந்த பிறகு அவரது சுய சம்பாத்தியத்தை கொண்டு வழக்கு சொத்தில் உள்ள மின் இணைப்பை அவரது பெயரில் பெற்றார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6க்கு முன்பாகவே



எனது பாட்டியின் பெயரில் இருந்த சொத்தில் 30 செண்ட் நிலத்தை விற்று தான் மின் இணைப்பு பெறப்பட்டது. சர்வீஸ் எண்.84 எப்போது வாங்கப்பட்டது என்றால் 1973 அல்லது 1974ல் இருக்கலாம். சரியாக நினைவில்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் ஏழுமலை என்பவர் தனிப்பட்ட முறையில் 1992ல் அவரது பெயரில் வாங்கினார் என்றால் சரியல்ல. நான் சொல்வது உண்மையாக இருந்திருந்தால் வா.சா.ஆ6ல் மின் இணைப்பு சம்பந்தமாக குறிப்பிட்டிருப்போம் என்றாலும் அப்போது மின் இணைப்பு இல்லாததால் தான் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி என்பவர் கிரையம் பெற்ற பிறகு வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி பாண்டுரங்கன் என்பவருக்கு கிரையம் கொடுத்து அதன்படி பாண்டுரங்கன் தான் வழக்கு சொத்தை பட்டா பெயர் மாற்றி அனுபவிக்கிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் செல்லத்தக்கவை அல்ல என்றால் சரியல்ல.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.